பக்கங்கள் 15

மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 மார்கழி 27 வெள்ளிக்கிழமை 12.01.2024 அதிர்வு 165

## நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்றார் வாசலதிலக



ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினரான நயன வாசலதிலக, சபாநாயகர் முன்னிலையில்

04▸




# ஈழத் தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவேற்ற வேண்டும் தமிழக அரசு

## சென்னையில் சாணக்கியன் எம்.பி. உரை

ஈழத் தமிழர்களான எங்களுக்கு நிம்மதியான சிறந்த எதிர்காலத்தையும், எமது அபிலாஷைகளை நிறைவேற்றக் கூடிய உரிமைகளையும் பெற்றுத் தருமாறு தமிழக அரசிடம் கேட்டுக்கொள்கின்றேன் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

தமிழக அரசின் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில், மூன்றாம் ஆண்டாக, “தமிழ் வெல்லும்” என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு, சென்னை வர்த்தக மையத்தில் அயலகத் தமிழர் தின விழா நடைபெற்று வருகின்றது.

04▸



# அடுத்த தேர்தல்களில் மொட்டுக்கே வெற்றி!

## அடித்துக் கூறுகின்றார் ராஜபக்ஷக்களின் சகா



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தலைமையில் அமையும் கூட்டணியே அடுத்த தேர்தல்களில் வெற்றி நடைபோடும் என்று அக்கட்சியின் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினரான எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், 04▸

# நல்லூரில் முதியவரின் சடலம்!

## கொலையா? தற்கொலையா?

## பொலிஸார் தீவிர விசாரணை




(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் – நல்லூர் சட்டநாதர் கோயில் பகுதியில் முதியவர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்தில் இன்று சட்ட வைத்திய அதிகாரி செல்லையா பிரணவன், தடயவியல் பொலிஸார் உள்ளிட்டோர் விஜயம் செய்து பார்வையிட்டு விசாரணையில் ஈடுபட்டனர்.

விஸ்வநாதப்பிள்ளை யோகேந்திரன் என்ற 62 வயதானவரே இவ்வாறு நேற்று இரவு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழப்பு இடம்பெற்று சில தினங்களாகி இருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் மகன் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு வழங்கிய தகவலுக்கமைய சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இது கொலையா? தற்கொலையா? என்பது விசாரணைகளின் பின்னரே தெரியவரும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## கொழும்பில் ஒருவர் வெட்டிப் படுகொலை

### சந்தே கநபர்களுக்கு வலைவீச்சு




கொழும்பு, வாழைத்தோட்டம் பகுதியில் நபர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவம் நேற்று இரவு இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு 12 ஐச் சேர்ந்த 48 வயதுடைய நபரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

தனிப்பட்ட தகராறு காரணமாக இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும், அவர்கள் பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளனர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.



### இலங்கை வந்துள்ள இளவரசி ஆன்னிடம்

# மலையகத் தமிழர் பற்றிய பிரிட்டனின் கடப்பாடுகளை நினைவூட்டுகின்றேன்

## சென்னையிலிருந்து மனோ தெரிவிப்பு

இலங்கைக்கும், பிரித்தானியாவுக்கும் இடையிலான 75 வருட இராஜதந்திர உறவு தொடர்பில் இலங்கை வந்துள்ள பிரித்தானிய இளவரசி ஆனுக்கு, இலங்கை வாழ் மலையக தமிழர் மற்றும் குறிப்பாக பெருந்தோட்ட மக்கள் தொடர்பில் இருக்கின்ற, அவரது பிரித்தானிய முடியரசின் பாரிய கடப்பாட்டை நினைவுறுத்துகின்றேன். இதை சொல்ல இதுதான் சிறந்த வேளை என்பதை தமிழ் முற்போக்குக் கூட்டணி தலைவர் என்ற முறையில் நான் உணர்கின்றேன் என்று த.மு.கூ. தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் கூறியுள்ளார்.

தற்போது சென்னையில் அயலக தமிழர் மாநாட்டில் தமிழக அரசின் அழைப்பின் பேரில் கலந்துகொண்டுள்ள மனோ கணேசன் சென்னையிலிருந்து தனது அதிகாரபூர்வ ருவிட்டர் தள செய்தி மூலம் மேலும் கூறியுள்ளதாவது:-

"இலங்கை, பிரித்தானியா வரலாற்றில் கறுப்புப் பக்கம், பெருந்தோட்ட மக்களின் அத்தியாயம்தான். இலங்கையின் ஏனைய மக்களுடன் ஒப்பிடும்போது கல்வி, சுகாதாரம், காணியுரிமை, வீட்டுரிமை, தொழில் உரிமை ஆகியவற்றில் மிகவும் பின்தங்கிய தரவுகளைக் கொண்ட தமிழ் பெருந்தோட்ட வதிவாளர்களின், குறை வளர்ச்சி தொடர்பிலான பிரித்தானிய முடியரசின் வரலாற்று கடப்பாட்டை இளவரசி ஆன் ஏற்க வேண்டும்.

நலிவுற்ற பிரிவினரான நமது மக்கள் தொடர்பிலான குற்றச்சாட்டு பட்டியலை இளவரசி ஆன் மீது சுமத்த நான் விரும்பவில்லை. ஆனால், இந்த கறுப்பு பக்கம் தொடர்பான நினைவூட்டலை நான் எடுத்துக்கூற விரும்புகின்றேன்.

இன்று இந்திய வம்சாவளி மலையகத் தமிழர் என்று இன ரீதியாக அழைக்கப்படும் இம்மக்கள், பிரித்தானிய முடியரசின் பிரதிநிதிகளான கிழக்கிந்திய கம்பனியால் 1823ம் ஆண்டு முதல் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டவர்கள். இன்றும்கூட, எமது உழைக்கும் மக்கள் பெருந்தோட்ட முகாமை நிறுவனங்களுடன் பின்னிபிணைக்கப்பட்டுள்ளனர்.

பிரித்தானியாவின் வெள்ளை ராஜ்யம் போன பிறகு உள்நாட்டு பிறவுன் ராஜ்யம் பெருந்தோட்டங்களில் எமது மக்களை இன்று ஆள்கிறது. இதனால் இன்னமும் இந்நாட்டின் முழுமையான பிரஜைகளாக கருதப்படாமல், நமது மக்கள் வாழ்கிறார்கள். இந்தியாவின் பாண்டிச்சேரி மக்களுக்கு பிரான்சிய ஆட்சியாளர்கள் செய்து விட்டு சென்ற ஏற்பாடுகளை ஒத்த ஏற்பாடுகளைக்கூட பிரித்தானியா எமது மக்களுக்கு செய்யவில்லை.

ஆகவே, கடந்த காலங்களில் இழந்துவிட்ட வளர்ச்சியை மீளப்பெறும், விசேட ஒதுக்கீட்டு செயற்திட்டத்தின் அடிப்படையில், இலங்கையின் மிகவும் பின்தங்கிய பிரிவினரான பெருந்தோட்டங்களில் வாழும் தமிழ் மக்களுக்கு உதவிட முன்வருமாறு பிரிதானியாவை நான், இம்மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் மிகப்பெரிய கட்சியின் தலைவர் என்ற முறையில் கோருகின்றேன்.

இன்று உங்களுக்கு பிரித்தானிய தூதுவர் அன்ரூ பெட்றிக் நடத்துகின்ற வரவேற்பு நிகழ்வுக்கு எனக்கு அழைப்பு விடுத்துள்ளார். நான் நாட்டில் இல்லாத காரணத்தால் அதில் கலந்துக் கொள்ள இயலாமல் இருப்பது அவருக்கு அறிவித்துள்ளேன். எமத கோரிக்கைகள் தொடர்பில் இலங்கையிலுள்ள பிரித்தானிய தூதுவரிடம் உரையாடி உள்ளேன். தொடர்ந்தும் உரையாட உள்ளேன்." – என்று மனோ கணேசன் குறிப்பிட்டுள்ளார்.



# வெள்ளத்தில் சிக்கி லொறிகள் விபத்து

## 600 சீமெந்து மூடைகள் நாசம்

திருகோணமலையில் இருந்து சீமெந்து ஏற்றிச் சென்ற லொறி ஒன்று வாழைச்சேனை பகுதியில் வெள்ளத்தில் சிக்கியதில் லொறி கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் லொறியில் ஏற்றிச்செல்லப்பட்ட 600 சீமெந்து மூடைகளும் நாசமடைந்துள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், வாழைச்சேனையில் மா ஏற்றிச் சென்ற லொறியொன்றும் வெள்ளத்தில் சிக்கியதில் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்துக்குள்ளான லொறியில் உள்ள மா மற்றுமொரு லொறிக்கு மாற்றப்பட்டது.

தொடர்ந்து பெய்து வரும் கன மழை காரணமாக பல பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### ஈழத் தமிழர்களின்...

விழாவில், 58 நாடுகளில் இருந்து, தமிழ் வம்சாவளியினர், அமைச்சர்கள், கல்வியாளர்கள், கவிஞர்கள் எனப் பலரது பங்குபற்றலோடு மேலும் பல தமிழ்ச் சங்கங்களைச் சேர்ந்தவர்கள் பங்கேற்றுள்ளனர்.

ஆரம்ப விழாவை தமிழக அமைச்சர் ஸ்டாலின் உதயநிதி தொடக்கி வைத்தார். இதன்போது சிறப்புரை ஆற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன்,

“1980 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் ஈழத்தமிழர்கள் இங்கு வந்து எமது நாட்டின் விடுதலைக்காக ஆயுதம் கேட்டிருந்தார்கள். அவர்களுக்கு இனத்தின் விடுதலைக்காக ஆயுதங்கள் வழங்கப்பட்டன.

அதேபோல் நானும் ஓர் ஆயுதத்தைக் கேட்கின்றேன். அது பொருளாதாரம் என்னும் ஆயுதம். எமது நாட்டின் ஜனாதிபதி கூட தான் இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கான திட்டத்தை தமிழ்நாட்டில் இருக்கும் பொருளாதாரம் மற்றும் வளர்ச்சியை வைத்துத்தான் திட்டத்தை வைத்துள்ளதாகச் சொல்கின்றார்.

அவ்வாறான ஒரு நிலையில் ஈழத் தமிழர்களின் அரசியல் உரிமைக்காகத் தொடர்ந்து போராடி வரும் நாம், தமிழக முதல்வரிடமும் அரசியல் பிரமுகர்களிடமும் கேட்பது உங்கள் சிறந்த ஆயுதமான பொருளாதாரத்தை வைத்துக் கொண்டு ஈழத் தமிழர்களான எங்களுக்கு நிம்மதியான சிறந்த எதிர்காலத்தையும், எமது அபிலாஷைகளை நிறைவேற்றக்கூடிய உரிமைகளையும் பெற்றுத் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.” – என்றார்.

### அடுத்த தேர்தல்களில்

“அடுத்த ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்ள நாம் தயார்.

எனினும், வேட்பாளர் குறித்து இன்னும் முடிவெடுக்கப்படவில்லை. வெற்றி வேட்பாளர் ஒருவர் களமிறக்கப்படுவார். இந்த விடயத்தில் கட்சி எடுக்கும் முடிவுக்கு கட்டுப்படுவேன்.

அடுத்த பொதுத் தேர்தலிலும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தலைமையில் அமையும் கூட்டணியே வெற்றி பெறும்.

அதேவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர்களுக்கு எதிராக சேறுபூசும் நடவடிக்கை இடம்பெறுகின்றது. கப்பல் விவகாரம்கூட இதன் ஓர் அங்கம்தான்.” – என்றார்.

### நாடாளுமன்ற...

நாடாளுமன்ற உறுப்பினராக இன்று உறுதியேற்றார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்த சமிந்த விஜேசிறி அப் பதவியை இராஜிநாமா செய்தார்.

இதையடுத்த கடந்த தேர்தலில் விருப்பு வாக்குப் பட்டியலில் அடுத்த இடத்தில் இருந்த நயன வாசலதிலக எம்.பியாகப் பதவியேற்றுள்ளார்.






# பாலஸ்தீனத்துக்கு அமைதி வேண்டி கொழும்பில் அமைதி ஆர்ப்பாட்டம்

(அஷ்ரப் ஏ சமத்)

பாலஸ்தீன் விடுதலை மற்றும் யுத்த நிறுத்தம் வேண்டி, இஸ்ரேலுக்கு எதிராக 'பலஸ்தீன் நண்பர்கள்' அமைப்பு கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் மெழுகுதிரி கொழுத்தி அமைதியாக ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

இதில் முன்னால் அமைச்சர் பயசர் முஸ்தபா, முன்னாள் ஆளுநர் அசாத் சாலி பலஸ்தீன் தூதுவர் உட்பட சில தொண்டர் அமைப்புக்கள் மற்றும் பெண்கள் கலந்து கொண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

சிறுவர்கள், பெண்கள், பாலஸ்தீன் குழந்தைகளை இஸ்ரேல் கொலை செய்யும் படங்கள், சுலோகங்களை ஏந்தியவாறும் பாலஸ்தீன் தனியான நாடு அந்த நாட்டை விட்டு இஸ்ரேலை வெளியேறுமாறும் அமெரிக்கா யுத்தத்தினை நிறுத்துமாறு கோசமிட்டனர்.

அத்துடன் இலங்கையில் இருந்து செங்கடலுக்குக்கடற்படை கப்பலை அனுப்புவதை இலங்கை ஜனாதிபதி நிறுத்த வேண்டும் என்றும் இதன் போது கேட்டுக் கொண்டனர்.






# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## வெள்ளையராக நடவுங்கள்!

பிரிட்டன் இளவரசி ஆனுக்கு, இலங்கை வாழ் மலையக தமிழர் மற்றும் குறிப்பாக பெருந்தோட்ட மக்கள் தொடர்பில் இருக்கின்ற, அவரது பிரித்தானிய முடியரசின் பாரிய கடப்பாட்டை நினைவுறுத்துகின்றேன் என்று தமிழகத்திலிருந்தவாறு கருத்து வெளியிட்டிருக்கின்றார் தமிழ் முற்போக்குக் கூட்டணி தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன்.

பிரித்தானிய முடியரசின் கீழ் இழைக்கப்பட்ட அநீதிக்கு, இன்று முடியரசின் உத்தியோகபூர்வ ஆட்சியதிகாரம் அங்கு இல்லாதபோதும், அந்நாட்டின் ஆட்சியதிகாரத்தின் குறியீடாக இருக்கும் முடித் தரப்பின் பிரதிநிதியிடம் அதை முறையிடுவதும் நியாயம் கேட்பதும் பொருத்தமானதே.

"இலங்கையில், பிரித்தானியா வரலாற்றில் கறுப்புப் பக்கம், பெருந்தோட்ட மக்களின் அத்தியாயம்தான். இலங்கையின் ஏனைய மக்களுடன் ஒப்பிடும்போது கல்வி, சுகாதாரம், காணியுரிமை, வீட்டுரிமை, தொழில் உரிமை ஆகியவற்றில் மிகவும் பின்தங்கிய தரவுகளைக் கொண்ட தமிழ் பெருந்தோட்ட வதிவாளர்களின், குறை வளர்ச்சி தொடர்பிலான பிரித்தானிய முடியரசின் வரலாற்று கடப்பாட்டை இளவரசி ஆன் ஏற்க வேண்டும்." - என்று சுட்டியிருக்கின்றார் மனோ கணேசன் எம்.பி.

மலையகத் தமிழர்கள் தொடர்பாக மாத்திரமல்லாமல், வடக்கு - கிழக்கில் வசிக்கும் இலங்கைத் தீவின் பூர்வீக மக்கள் கூட்டமான இலங்கைத் தமிழர்கள் சார்பிலும் பிரிட்டனின் முடிக்குரிய பிரதிநிதியிடம் அவரின் இலங்கை வருகை சமயத்தில் சில விடயங்களைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

இன்று இலங்கையில் ஈழத் தமிழர்களின் இந்த அவல நிலைக்கும், நாட்டின் சீரழிவுச் சூழலுக்கும், இந்த நாடு வரலாற்றில் மிக மோசமான இன யுத்தத்தில் மூழ்கி, மீள முடியாத நெருக்கடியில் மாட்டி நிற்கின்றமைக்கும் பிரிட்டனின் முடிக்குரிய ஆட்சியே பிரதான பொறுப்பு - இல்லையில்லை முழுப் பொறுப்பு - ஏற்க வேண்டும்.

அந்நியர் ஆட்சிக்கு - ஆளுகைக்கு - உட்படட முன்னர் இலங்கை தீவு, வரலாற்றுக் காலம் தொட்டு இங்கு நிலை கொண்டிருக்கும் இரண்டு இன மக்கள் கூட்டத்தின் தனித் தனி தேசங்களாகவே மிளிர்ந்தது.

தனியான மொழிகள், பண்பாடுகள், வாழ்வியல் முறைகள், ஒன்றுபட்ட - தொடரான - தனித் தாயகங்கள், வழக்காறுகள், வரலாறுகளுடன் அவை விளங்கின.

சுமார் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் தமிழர் தேசத்தின் இறைமையை முதலாவது அந்நியர் கூட்டமான போர்த்துக்கேயர்கள் கைப்பற்றிய போதிலும் சரி, பின்னர் அவர்களிடமிருந்து தமிழர் தேசத்தின் அந்த இறைமையை ஒல்லாந்தர்கள் பிடுங்கிக் கொண்ட போதும் சரி, அதைத் தொடர்ந்து இலங்கைத் தீவின் அதிகாரம் பிரிட்டிஷ் வெள்ளையர்களிடம் கைமாறிய போதிலும் சரி, தமிழர் தேசம் தனியாகவே - தனித்துவமான ஆளுநர்களின் கீழேயே - நிர்வகிக்கப்பட்டு வந்தது. அதுதான் வரலாறு.

19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் தமது நிர்வாக வசதிக்காக முழு இலங்கை தீவையும் ஒரே ஆளுநரின் கீழ் கொண்டு வந்து, தமிழர் தேசம் - சிங்கள தேசம் ஆகிய இரண்டையும் ஒரு நாடாக மாற்றி, ஆட்சி புரிந்தனர் வெள்ளையர்கள்.

அது கூடத் தவறு இல்லை எனலாம். ஆனால் 1948 இல் இலங்கை தீவில் தமது ஆட்சியை - அதிகாரத்தை - முடித்துக் கொண்டு வெளியேறிய வெள்ளையர்கள், தாம் இரண்டு நாடுகளாகக் கைப்பற்றி, பின்னர் நிர்வாகத்துக்காக ஒன்றிணைத்த தேசங்களை, ஒரே நாடாக இலங்கைத் தீவில் எண்ணிக்கையில் பெரும்பான்மையினரான சிங்களவர்களிடம் கையளித்துச் சென்றனர்.

இந்த வரலாற்றுத் தவறே இந்தத் தீவின் பெரும்பான்மையினரான பௌத்த - சிங்கள பேரினவாத வெறிப்போக்குக் கொண்ட ஆட்சியாளர்களின் கைகளில் சிறுபான்மையினரான தமிழர்களும் அவர்களது தாயக தேசமும் சிக்கி, அடக்கி ஒடுக்கப்பட்டு, தமது மண்ணை - தாயகத்தை - இனத்தை - தனித்துவத்தை - இழக்கும் பேராபத்தில் கொண்டு போய் மாட்டியது.

போர்த்துக்கேயரிடம் பறிகொடுத்த தமது தேசத்தின் இறைமை, ஒல்லாந்தர், பிரிட்டிஷார் வழியாக பௌத்த - சிங்கள அரசுடம் கைமாறியுள்ள நிலையில், அதை மீட்டெடுப்பதற்காகப் பல வழிகளிலும் போராட வேண்டிய வரலாற்று துன்பியல் நிலைமையையும் தமிழர் தேசத்திற்கு இதுவே ஏற்படுத்திக் கொடுத்தது.

தான் இழைத்த இந்த வரலாற்றுத் தவறை பிரிட்டன் இன்னும் பகிரங்கமாக ஏற்றுக் கொள்ளாமல் தொடர்ந்து மிதப்புடன் நடந்து வருகின்றது.

இலங்கைத் தீவுக்கு வர்த்தகத்துக்கு வந்தவர்கள் என்ற அடையாளத்தோடு இங்கு புகுந்த வெள்ளையர்கள், இந்தத் தீவை தமது ஆட்சி அதிகாரத்துக்கு உட்படுத்தி, இலங்கை தீவின் இரு பாரம்பரிய தேசங்களையும் சுரண்டி, கொள்ளையிட்டமை மட்டுமல்லாமல், முழு தீவையுமே உள்நாட்டு யுத்தத்துக்குள்ளும், முரண்பாட்டுக்குள்ளும், தீர்க்க முடியாத சிக்கல்களுக்குள்ளும் கொண்டு போய் மாட்டி விட்டுச் சென்றிருக்கின்றார்கள்.

இந்தக் கட்டத்திலாவது பிரிட்டிஷ் வெள்ளையர்கள், 'வெள்ளை மனம்' படைத்தவர்களாக நடந்து, தமது வெள்ளை மனத்தன்மையை நிரூபிக்க வேண்டும்.

இலங்கை தீவின் இரண்டு தேசங்களை ஒன்றிணைத்து, ஒரு தேசத்தின் இறைமையை மற்ற தேசத்திடம் அடிமைப்படுத்திச் சென்ற வரலாற்றுத் தவறை ஒப்புக்கொண்டு, அதற்கு ஈடு செய்ய முற்பட வேண்டும்.





# திருவள்ளுவர் சிலை திறப்பு!

(த.சுபேசன்)

சாவகச்சேரி - பெரிய அரசடி சனசமூக நிலையத்தின் தலைவராக கடந்த 2015 தொடக்கம் 2022 வரை பதவி வகித்த அமரர் யோகேஸ்வரன் ஜெயக்குமாரின் ஞாபகார்த்தமாக சனசமூக நிலைய முன்றலில் திருவள்ளுவர் சிலை நிறுவப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அமரர் ஜெயக்குமாரின் குடும்பத்தினரின் அனுசரணையுடன் அமையப்பெற்ற திருவள்ளுவர் சிலையை திருமதி கலாயினிச்சித்திரா ஜெயக்குமார் திரைநீக்கம் செய்து வைத்துள்ளார்.

அமரர் யோ.ஜெயக்குமார் சாவகச்சேரி நகரசபையின் முன்னாள் உறுப்பினர் என்பதும் குறிப்பிடத் தக்கது.



# மாடுகளுக்கு உணவான வேளாண்மையை பெற்றோருக்காகத் தானம் செய்த தம்பதியர்!

(அப்துல்சலாம் யாசீம் )

மூன்று ஏக்கர் வேளாண்மையை மாடுகளுக்கு உண்பதற்காக தாய் தந்தையரின் ஞாபகார்த்தமாகத் தானம் செய்துள்ளனர்.

திருகோணமலை மாவட்டத்தில் மொரவெவ பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட மஹதிவுல்வெவ பகுதியிலுள்ள கெமுனு திஸ்ஸ மற்றும் அவரது மனைவி தம்மிகா தமயந்தி ஆகியோரே இந்தச் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர்.

ஒவ்வொரு வருடமும் வேளாண்மை செய்து பௌத்த துறவிகளுக்கும், விகாரைகளுக்கும் உதவி செய்து வந்துள்ளனர். இந்த முறை தமது பெற்றோர்களுக்காக தானம் செய்யும் நோக்கில் 3 ஏக்கர் வேளாண்மையை மாடுகளுக்கு உவாகத் தானம் செய்துள்ளார்.

மஹதிவுல்வெவ-திம்பிரிவெவ ரஜமஹா விஹாரையின் விஹாராதிபதி பொல்ஹேன்கொட உபரத்ன ஹிமியின் ஆசிர்வாதத்துடன் சமய வழிபாட்டுடன் இந்த நிகழ்வு இடம் பெற்றது.

இதன் போது கிராம மக்களும் கலந்து கொண்டு சமய வழிபாட்டில் ஈடுபட்டதுடன் மாடுகளையும் வேளாண்மை உண்பதற்காக கொண்டு வந்திருந்தனர்.

# அட்டாளைச்சேனை பிரதேச செயலர் வெள்ளப் பாதிப்பைப் பார்வையிட்டார்



(எம்.ஏ.ஏ.அக்தார்)

அம்பாறை மாவட்டத்தில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள பாலமுனை, உதுமாபுரம் மற்றும் சின்னப் பாலமுனை ஆகிய இடங்களுக்கு சென்ற அட்டாளைச்சேனை பிரதேச செயலர் எம்.ஏ.ஸி.எம்.ஸாபிர் அனர்த்தங்களைப் பார்வையிட்டதுடன், நீர் வடிந்தோடுவதற்கான துரித நடவடிக்கைகளையும் மேற்கொண்டார்.

இதன்போது கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் எம்.எஸ். உதுமாலெவ்வை, உதவிப் பிரதேச செயலர், கணக்காளர், கிராம நிர்வாக உத்தியோகத்தர் ஆகியோர்கள் சமூகமளித்திருந்தனர்.



# கல்முனை மக்களின் அவலம்; பார்வையிட்டார் ஹரீஸ் எம்.பி.!

(நூருல் ஹுதா உமர், சர்ஜுன் லாபீர், எம்.ஏ.ஏ.அக்தார்)



கல்முனை பிரதேச செயலர் பிரிவில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் தற்போதைய நிலை தொடர்பில் முன்னாள் இராஜாங்க அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எச்.எம்.எம் ஹரீஸ் நேரில் சென்று பார்வையிட்டார்.

அத்துடன் கல்முனை பிரதேச செயலர் ஜெ. லியாக்கத் அலியுடனும் நிவாரணம் தொடர்பில் கலந்துரையாடினர்.

இதன்போது பாதிப்பு நிலைகளை கேட்டறிந்த நாடாளுமன்ற உறுப்பினர் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கும் ஏற்பாடுகள் தொடர்பிலும் ஆராய்ந்துள்ளார். நிவாரண பணிகளை முன்னெடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக்க அபேவிக்ரமவையும் மாவட்ட செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர் ஹரீஸ் எம்.பி.

இதன்போது மாவட்டப் பாதிப்பு நிலைகளை அரச அதிபரிடம் கேட்டறிந்த நாடாளுமன்ற உறுப்பினர் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கும் ஏற்பாடுகள் தொடர்பிலும் ஆராய்ந்து துரிதகதியில் நிவாரண பணிகளை முன்னெடுப்பது தொடர்பில் கலந்துரையாடினார்.



# பொலிவேரியன் குடியேற்றக் கிராமம் வெள்ள அனர்த்தத்தால் நிர்க்கதியில்!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

வெள்ள அனர்த்தத்தால் சாய்ந்த மருது பொலிவேரியன் சுனாமி குடியேற்ற திட்ட கிராம மக்கள் நிர்க்கதி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

ஒரு புறம் பாம்புகளின் தொல்லை, மறு புறம் முதலைகளின் நடமாட்டத்துக்கு மத்தியில் செய்வதறியாது திண்டாட்டம் அடைகின்றனர்.

இந்த அனர்த்தத்தால் சாய்ந்தமருது பொலிவேரியன் சுனாமி குடியேற்ற திட்ட கிராம மக்கள் சிறு குழந்தைகளோடும், வயோதிபர்களோடும் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

கரைவாகு ஆற்றால் பரவும் வெள்ள நீர் முழுக் கிராமத்தையும் ஆக்கிரமித்துள்ளது .

கிராமத்தை விட்டு வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்து செல்ல முடியாத நிர்க்கதி நிலைக்குள்ளாகியுள்ள இந்த மக்கள் 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட பாரிய சுனாமி அனர்த்தத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள்.

மீன்பிடி , விவசாயம் என்பவற்றோடு நாளாந்தம் கூலித் தொழில் செய்து தமது குடும்ப வருமானத்தை பெற்றுக் கொள்ளும் இந்த மக்கள் வெள்ள நிலைமையில் தொழிலின்றி இக்கட்டான நிலமைக்கு தள்ளப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# கிளங்கன் ஆஸ்பத்திரிக்குச் செல்லும் நோயாளர் நிழற்குடை இன்றி அவதி!

(மஸ்கெலியா நிருபர்)

ஹட்டன் நோர்வூட் பிரதான வீதியில் அமைந்துள்ள கிளங்கன் ஆதார வைத்திய சாலைக்கு செல்லும் நோயாளிகள் நிழற்குடை இன்றி அவதிப்பட்டு வருகின்றனர்.

வீதியிர் சிறிய அளவில் உள்ள நிழற்குடை முறையாக அமைக்கபடாததால் கர்ப்பிணி பெண்கள் நோயாளிகள் மழை காலங்களிலும் கோடை காலங்களில் சிரமத்துக்கு ஆளாகி வருகின்றனர்.

வைத்தியசாலைக்குச் செல்லும் பிரதான வழியிலும், வெளியேறும் இரு பகுதியில் உள்ள பிரதான வீதியிலும் சுமார் 20 இற்கு மேற்பட்ட நோயாளிகள் அமர்ந்து இருந்து பஸ்கள் வரும் வரை காத்திருந்து பயணிக்க வழி செய்து கொடுக்க முன்வர வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளைக் ஹட்டன் நகர சபை, நோர்வூட் பிரதேச சபை ஆகியன மேற்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# சாவகச்சேரி மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கல்

(த.சுபேசன்)

சாவகச்சேரியில் பாடசாலை மாணவர்கள் 100 பேருக்குக் புதிய கல்வி ஆண்டுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

சாவகச்சேரி டச் வீதியில் அமைந்துள்ள தனியார் மண்டபம் ஒன்றில், சாவகச்சேரி நகரசபையின் முன்னாள் உறுப்பினர் ம.நடனதேவன் தலைமையில் இடம்பெற்ற உதவித் திட்டம் வழங்கும் நிகழ்வில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கலந்து கொண்டு கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்திருந்தார்.

சாவகச்சேரி தபாற்கந்தோர் வீதியைச் சேர்ந்த லண்டனில் வசிக்கும் தி.கண்ணனின் பிள்ளைகளுடைய பிறந்த நாள் அன்பளிப்பாகக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.









# பத்தினிபுரம் மக்களுக்கு உலர் உணவு வழங்கல்

(ஹஸ்பர்)

சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட மழை வெள்ளம் காரணமாகத் தம்பலகாமம் பிரதேச செயலகத்தின் பாலம் போட்டாறு கிராம சேவகர் பிரிவின் பத்தினிபுரம் கிராமத்தில் 17 குடும்பங்கள் பாதிக்கப்பட்டன.

இவர்களுக்கான உலர் உணவுப் பொதிகள் தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் பாலம்போட்டாறு சித்திவிநாயகர் வித்தியாலயத்தில் வைத்து வழங்கப்பட்டன.

இதில் திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்க தலைவரும் தமிழ் அரசுக் கட்சியின் மாவட்ட தலைவருமான சண்முகம் குகதாசன் கலந்து கொண்டு பொருள்களை வழங்கினார்.

இதில் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம அதிகாரி என பலரும் கலந்து கொண்டனர்.

# பெண்ணின் தாலியை அபகரித்து தப்பிக்க முயற்சித்தவர் அகப்பட்டார்

(மஸ்கெலியா நிருபர்)

பொகவந்தலாவை பிரதேசத்தில் வீதியில் சென்ற பெண் ஒருவரின் தாலிக் கொடியை பறித்துக் கொண்டு தப்பியோட முயற்சித்த இருவரை பொது மக்கள் பிடித்து, நையப்புடைத்து பொகவந்தலாவ பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் சென்ற திருடர்கள்,தாலிக் கொடியை அபகரித்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர். சம்பவத்தை அறிந்த சிலர், ஓட்டோவில் மோட்டார் சைக்கிளைத் துரத்திச் சென்றுள்ளனர்.

திருடர்கள் இருவரும், பலாங்கொடை வீதிக்கு செல்வது எவ்வாறு என்று கேட்டறிந்த பின்னர், தவறுதலாக தோட்டத்துக்குச் செல்லும் வீதிக்குள் மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளனர். இந்த நிலையில் பின் தொடர்ந்த பொது மக்கள் திருடர்களைப் பிடித்து, நையப்புடைத்து பொகவந்தலாவ பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். சந்தேக நபர் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.





# ‘ஒரே நாடு ஒரே தேர்தல்’: மம்தா பானர்ஜி எதிர்ப்பு



‘ஒரே நாடு ஒரே தேர்தல்’ திட்டம் சர்வாதிகாரத்துக்கு வழிவகுக்கும் என்று மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி குற்றம் சாட்டியுள்ளார்.

நாடாளுமன்ற மக்களவை மற்றும் மாநில சட்டப்பேரவைகளுக்கு ஒரே நேரத்தில் தேர்தல் நடத்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. ஒரே நாடு ஒரே தேர்தல் என்ற இந்த திட்டத்தை அமுல்படுத்துவது குறித்து ஆராய குடியரசு முன்னாள் தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமையில் ஒரு உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து எதிர்வரும் 15 ஆம் திகதிக்குள் பொதுமக்கள் தங்கள் ஆலோசனையை கூறலாம் என மேற்படி குழு கேட்டுக் கொண்டுள்ளது.

இந்த நிலையில், அந்த குழுவின் செயலாளர் நிதின் சந்திராவுக்கு மேற்கு வங்க முதல்வரும் திரிணமூல் காங்கிரஸ் தலைவருமான மம்தா பானர்ஜி கடிதம் எழுதியுள்ளார்.

அந்த கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிடுகையில்.

”நாடு சுதந்திரம் அடைந்த பிறகு 1951-52-ம் ஆண்டு நாடாளுமன்ற மக்களவை மற்றும் மாநில சட்டப்பேரவைகளுக்கு ஒரே நேரத்தில் தேர்தல் நடைபெற்றது. அடுத்த சில ஆண்டுகளுக்கு இதே நிலை தொடர்ந்தது.

ஆனால், பல்வேறு காரணங்களால் இந்த நிலை மாறியது. இந்த சூழ் நிலையில், மீண்டும் ‘ஒரே நாடு ஒரே தேர்தல்’ என்ற பெயரில் தேர்தலை நடத்தினால் அது நம் நாட்டின் அரசியல் சாசனத்தின் அடிப்படை கட்டமைப்பையே வலுவிழக்கச் செய்துவிடும்.

உண்மையான ஜனநாயகம் மற்றும் கூட்டாட்சி உணர்வுக்கு எதிரான, தன்னிச்சையாக எடுத்த முடிவை திணிக்க மத்திய அரசுமுயற்சிக்கிறது. இது சர்வாதிகாரத்துக்கு வழிவகுக்கும்.

மக்களவையோ, சட்டப் பேரவை பாதியில் கலைக்கப்பட்டால் பல்வேறு சிக்கல்கள் ஏற்படும். எனவே ஒரே நாடு ஒரே தேர்தல் திட்டத்தை நாங்கள் ஏற்க மாட்டோம்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

# ‘அன்னபூரணி’ திரைப்படத்துக்கு எதிர்ப்பு: நயன்தாராவுக்கு எதிராக வழக்கு பதிவு

நடிகை நயன்தாரா நடிப்பில் அண்மையில் வெளியான ”அன்னபூரணி” திரைப்படத்தில் கடவுள் ராமர் அவமதிப்பு செய்யப்பட்டுள்ளார் என எழுந்தபுகாரையடுத்து நயன்தாரா மீது மத்திய பிரதேச மாநிலத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

நடிகை நயன்தாரா நடிப்பில் வெளியான அவரது 75 ஆவது திரைப்படம் ‘அன்னபூரணி’ . இதில், அவர் சமையல்கலை நிபுணராக நடித்திருந்தார். நிலேஷ் கிருஷ்ணா இயக்கத்தில் உருவான இந்த திரைப்படம் கடந்த வாரம் நெட்பிளிக்ஸ் ஓ.டி.டி. தளத்தில் வெளியானது.

இந்த படத்தில் உள்ள சில வசனங்கள் மற்றும் காட்சிகள் இந்துக்களின் மத உணர்வுகளை புண்படுத்துவதாக அமைந்துள்ளன என மகாராஷ்டிரா, மத்திய பிரதேச மாநிலங்களில் உள்ள இந்து அமைப்புகள் பொலிஸ் நிலையங்களில் புகார் அளித்தன.

குறிப்பாக, கடவுள் ராமரை அவமதிக்கும் வகையில்சில வசனங்கள் இடம் பெற்றுள்ளன என அந்தப் புகாரில் தெரிவிக்கப்பட்டது. இந்து விரோத கருத்துகளை ஊக்குவிக்கும் வகையில் அந்தப் படத்தில் நடித்ததற்காக



நயன்தாராவுக்கும் எதிர்ப்புகள் வலுத்தன. இது, தொடர்பாக சமூக வலைதளங்களின் வாயிலாகவும் பரவலாக கண்டன குரல்கள் எழுந்தன. இந்த சூழ்நிலையில், அன்னபூரணி திரைப்படம் ஓ.டி.டி. தளத்திலிருந்து திடீரென திரும்பப் பெறப்பட்டது.

இதனிடையே, மத்திய பிரதேச மாநிலத்தில் ஹிந்து சேவா பரிஷத் முன்னணி அமைப்பு ஜபல்பூர் மாவட்ட ஓம்டி பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்தது. அதன்பேரில், நடிகை நயன்தாரா, இயக்குநர் நிலேஷ் கிருஷ்ணா, தயாரிப்பாளர்கள் ஜதின் சேத்தி மற்றும் ஆர் ரவீந்திரன், நெட்பிளிக்ஸ் இந்தியாவின் உள்ளடக்க தலைவர் மோனிகா ஷெர்கில் உள்ளிட்ட 7 பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சர்ச்சைக்குரிய காட்சிகள் மற்றும் வசனங்கள் நீக்கப்பட்டு அல்லது மாற்றப்பட்டு ‘அன்னபூரணி’ திரைப்படம் மீண்டும் ஓ.டி.டி.யில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையே, இந்த திரைப்படம் யாருடைய உணர்வு களையும் புண் படுத்தியிருந்தால் அதற்கு மன்னிப்பு கோருவதாக தயாரிப்பாளர் தரப்பு தெரிவித்துள்ளது.

# ஹவுதி கிளர்ச்சியாளர்களின் இலக்குகள் மீது அமெரிக்க, பிரித்தானிய படையினர் தாக்குதல்!



யேமனில் உள்ள ஹவுதி கிளர்ச்சியாளர்களின் இலக்குகளுக்கு எதிராக அமெரிக்கா மற்றும் பிரித்தானிய படையினர் வான்வழித் தாக்குதல்களை ஆரம்பித்துள்ளனர் என அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அண்மைக்காலமாக செங்கடலில் பயணிக்கும் வர்த்தக கப்பல்களை இலக்கு வைத்து யேமனின் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல்களை நடத்தியிருந்தனர்.

இதனை அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட பல நாடுகள் கண்டித்திருந்ததுடன், அதில் இருந்து பாதுகாப்பு வழங்க பதில் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அறிவித்திருந்தன.

இந்த நிலையில், மேற்படி தாக்குதல்களை ஏமனில் உள்ள சாட்சிகளும் உறுதிப்படுத்தியுள்ளன.

இந்தநிலையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன். ”தேவைப்பட்டால் மேலும் நடவடிக்கை எடுக்கத் தயங்கமாட்டோம்” என்று எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில்,

”எங்களுடைய மக்களுக்கு எதிரான நடவடிக்கைகள் மற்றும் கப்பல்கள் செல்லும் வழித்தடத்தின் சுதந்திரத்தை கெடுக்கும் எந்த செயலையும் நாங்களோ எங்களது கூட்டாளிகளோ பொறுத்துக்கொள்ள மாட்டோம் என்பதை இந்தத் தாக்குதல்கள் தெளிவாக உறுதிப்படுத்துகின்றன.

ஹவுதிகள் நேரடியாக அமெரிக்க கப்பல்கள் மீது தாக்குதல்கள் நடத்தியுள்ளனர்.

செங்கடல் வணிகப் பாதையைப் பாதுகாக்க அமெரிக்கா தலைமையிலான ‘ஒபரேஷன் பிராஸ்பெரிட்டி கார்டியன்’-க்கு 20“ இற்கு அதிகமான நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன. அவுஸ்ரேலியா, பெஹ்ரைன், கனடா மற்றும் நெதர்லாந்து இந்த ஒபரேஷனை ஆதரித்துள்ளன. என்றாலும் தற்போதைய அமெரிக்க, பிரித்தானியா தாக்குதல் அந்த ஒபரேஷனுடன் தொடர்புடையது இல்லை.

ஹவுதிகளின் பொறுப்பற்ற தாக்குதல்களுக்கு சர்வதேச சமூகத்தின் பதிலடி ஒற்றுமையானது உறுதியானது” என்று குறிப்பிட்டுள்ளார்.

பிரித்தானிய பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், ”வணிகக் கப்பல்களை அச்சுறுத்தும் ஹவுதிகளின் தாக்குதல்களுக்கு எதிரான முதல் அடி இது” என்று தெரிவித்துள்ளது.

தலைநகர் சானா, சாதா, தாமர் மற்றும் ஹொடைடா பகுதிகளில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளன என்பதை ஹவுதி அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர். இந்த தாக்குதல்களை அவர்கள்,‘அமெரிக்கா – சியோனிஸ்ட் – பிரிட்டிஷ் ஆக்கிரமிப்பு’ என்று வர்ணித்துள்ளனர்.

சானா விமானநிலையம் அருகில் உள்ள இராணுவ தளம், டைஸ் விமான நிலையம் அருகே உள்ள இராணுவ தளம், ஹொடைடாவில் உள்ள ஹவுதிகளின் கப்பல் தளம் மற்றும் ஹஜ்காவில் உள்ள ராணுவத் தளங்களின் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. நேற்று நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல்களுக்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் என்று ஹவுதி தலைவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

செங்கடல் பாதையில் செல்லும் சர்வதேச கப்பல்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களை நிறுத்துமாறு ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச நாடுகள் அழைப்பு விடுத்தும் ஹவுதிகள் அதற்கு செவி சாய்க்கவில்லை.

கடந்த ஒக்டோபரில் இஸ்ரேல் – ஹமாஸ் போர் வெடித்தில் இருந்து ஏமனில் இயங்கி வரும் ஹவுதிகள் செங்கடலில் கப்பல்கள் மீது ஏவுகணை மற்றும் ஆளில்லா விமானங்கள் மூலமாக தாக்குதல் நடத்தி வருகின்றனர். ஹமாஸ்களுக்கு ஆதரவளிக்கும் விதமாக இந்தத் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஏமன் உள்நாட்டுப் போரில் பெரும் பகுதியை கைப்பற்றிய ஹவுதிகள், ஹமாஸ்களுக்கு ஆதரவாக இஸ்ரேஸ் துறைமுகத்துக்கு செல்லும் அந்த நாட்டுடன் தொடர்புடைய கப்பல் கள் மீது தாக்குதல் நடத்துவதாக தெரிவித்திருந்தனர்.

என்றாலும் தாக்கப்பட்ட கப்பல்களில் பெரும்பாலானவை இஸ்ரேலுடன் தொடர்பு இல்லாதவை என்பது குறிப்பிடத்தக்கது.

ஐரோப்பா – ஆசியா இடையேயான கப்பல் போக்குவரத்தில் 15 சதவீதம் பங்கு வகிக்கும் முக்கிய கடல் வணிகப் பாதையான செங்கடல் பாதையில் இதுவரை 27 கப்பல்கள் மீது ஹவுதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். ஏடன் வளைகுடாவில் உள்ள சர்வதேச கப்பல் பாதையில் ஹவுதிகள் கப்பல் எதிர்ப்பு பால்லிஸ்டிக் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியதாக அமெரிக்க இராணுவம் நேற்று தெரிவித்தது.

# பாகிஸ்தானில் கடும் குளிர்: 36 குழந்தைகள் பலி

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் குளிர் காலநிலையால் ஏற்பட்ட நிமோனியா காரணமாக 36 குழந்தைகள் பலியாகி உள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேலும் நிமோனியாவால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கையை தொடர்ந்து அதிகரித்து வருவதால் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை பாடசாலைகளில் காலைக் கூட்டம் நடத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேலும் குளிர் காலநிலையில் இருந்து குழந்தைகளை பாதுகாக்க அடிப்படை சுகாதார வழிமுறைகளும் வெளியிடப்பட்டுள்ளன.

அதன்படி குழந்தைகள் கட்டாயமாக முகக் கவசம் அணிய வேண்டும், கைகளை நன்றாக கழுவ வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருமல், காய்ச்சல் அல்லது தொண்டை வலி போன்ற அறிகுறிகள் உள்ள குழந்தைகளை பாடசாலைக்கு அனுப்பக் கூடாது என்றும் பெற்றோர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை முன்பள்ளி மற்றும் ஆரம்பப்பிரிவு வகுப்புகளுக்கு ஜனவரி 19 வரை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் பஞ்சாப்பில் 990 குழந்தைகள் நிமோனியாவால் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# குறிஞ்சாகேணியில் தற்காலிக இரும்புப் பாலம் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்துள்ள ஆளுநர்!

## நன்றி தெரிவித்துள்ளார் தௌபிக் எம்.பி.



(எஸ்.கீதபொன்கலன், ஹஸ்பர்)

திருகோணமலை, குறிஞ்சாகேணியில் தற்காலிக இரும்பு பாலத்தை பொருத்த ஆளுநர் செந்தில் தொண்டமான் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

கிண்ணியா குறிஞ்சாகேனியில் தற்காலிக இரும்பு பாலத்தை பொருத்த 10 லட்சம் ரூபா நிதியை விடுவித்த கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் நன்றி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இந்த விவகாரம் தொடர்பில் உரையாற்றும் போதே எம்.எஸ்.தௌபீக் இவ்வாறு ஆளுநருக்கு நன்றி கூறினார்.

எம்.எஸ்.தௌபீக் எம்.பி. இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது,

9 வருடங்களுக்கு முன்னர் குறிஞ்சாகேனியில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக குறிஞ்சாகேனி பாலம் உடைந்தது. இந்தப் பாலத்தைப் புனரமைப்புச் செய்து தருமாறு மக்கள் மத்தியில் எழுந்த கோரிக்கையை அடுத்து 2021 ஆம் ஆண்டு முயற்சிகளை மேற்கொண்டோம். ஆனால், நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் அதனை தொடர முடியாது போனது.

இதேவேளை, தற்போது பாலத்தில் பயணிக்க முடியாத நிலைமை காணப்படுகிறது. இந்தப் பாலத்தை நிர்மாணிக்க நிதியை பெற்றுத் தருமாறு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானிடம் நான் கோரிக்கையொன்றை முன்வைத்தேன்.

உடனடியாக அதற்கான நிதியை விடுவிக்க ஆளுநர் செந்தில் தொண்டமான் நடவடிக்கை எடுத்துள்ளார். - என்றார்.



# மட்டக்களப்பு கோவில்குளத்தில் பொலிஸாரால் விஷேட சோதனை!

(பழுவூரான்)

நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வரும் யுத்திய போதைப்பொருள் சுற்றிவளைப்புச் சோதனை மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியிலுள்ள கோவில்குளத்தில் முன்னெடுக்கப்பட்டது.

இவ்விஷேட சுற்றிவளைப்பைக் காத்தான்குடி, மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலைப் பொலிஸாரும் அவர்களோடு இணைந்து விஷேட அதிரடிப்படையினர் மற்றும் போக்குவரத்துப் பொலிஸாரும் மேற்கொண்டனர்.

இதன்போது அந்த வீதி வழியாக வருகை தந்த இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ் மற்றும் தனியார் பஸ்களில் பயணித்தோர் இறக்கப்பட்டு, பரிசோதிக்கப்பட்டன. அத்தோடு வாகனங்களும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இந்த நடவடிக்கையில் விஷேட மோப்ப நாய்களும் கொண்டு வரப்பட்டு சோதனை இடம்பெற்றது.



# மன்னார் நகர சபை முறையற்ற கழிவகற்றல்; தொற்று நோய்கள் பரவும் அபாய நிலைமை!

## போராட்டத்துக்குத் தயாராகும் மக்கள்

(மன்னார் நிருபர்)

மன்னார் நகர சபை எல்லைக்குள் சேகரிக்கப்படும் கழிவுகளை முறையற்ற விதமாக சாந்திபுரம் காட்டுப்பகுதிக்குள் கொட்டுவதனால் டெங்கு நோய் உட்பட பல்வேறு தொற்று நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று சாந்திபுரம் கிராம மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

மன்னார் நகரசபை முன்னதாக பாப்பா மோட்டை பகுதியில் உள்ள திண்ம கழிவகற்றல் நிலையத்தில் ஒழுங்கான முறையில் குப்பைகளை தரம் பிரித்து களஞ்சியப்படுத்தாமையால் கொழும்பை சேர்ந்த அரசார்பற்ற நிறுவனம் ஒன்று வழக்கு தொடர்ந்து இந்தப் பகுதியில் திண்ம கழிவுகளை சேகரிப்பதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் மன்னார் நகர சபைக்குத் தடை விதிக்கப்பட்டது.

இவ்வாறான நிலையில் இந்த தீர்ப்பை காரணம் காட்டி மன்னார் நகரசபை நீண்ட நாள்களாக மன்னார் நகரில் கழிவகற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ளாமல் நகரமே சுகாதார சீர்கேடுகளுக்கு உள்ளாகியிருந்தது.

இந்த நிலையில் ஏற்கனவே சாந்திபுரம் பகுதியில் மிருகங்களின் உடல் பாகங்கள், மருத்துவ கழிவுகள் உட்பட முறையற்ற விதமாக குப்பைகள் கொட்டப்பட்ட நிலையில் மக்களின் எதிர்ப்புத் தெரிவித்தனர். இந்த நிலையில் குறித்த செயற்பாடு நிறுத்தப்பட்டிருந்தது.

இவ்வாறான நிலையில் மக்களின் எதிர்ப்பை மீறி மீண்டும் நகர சபை திண்ம கழிவுகளை அனுமதியின்றி தரம் பிரிக்காது சாந்திபுர காட்டுப் பகுதிக்குள் கொட்டுவதாக சாந்திபுரம் பகுதி மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

உக்காத குப்பைகளையும் இலத்திரனியல் கழிவுகளையும் நீர் நிலைகளுக்குள்ளும் பள்ளங்களுக்குள்ளும் நகரசபை கொட்டி நிரப்பி வருகின்றது.

இவ்வாறான நிலையில் சாந்திபுரம் பகுதியில் தொற்று நோய்கள் பரவுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

உடனடியாக நகரசபை குப்பை கொட்டும் செயற்பாட்டை நிறுத்துமாறும் கொட்டிய குப்பைகளை உரிய விதமாக அகற்றுமாறும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

இல்லாது போனால் மக்களைத் திரட்டி நகர சபைக்கு முன்பாக போராட்டம் ஒன்றை முன்னெடுக்க உள்ளனர் என்றும் சாந்திபுரம் மக்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# வரி அடையாள எண்ணை ஏப்ரல் வரையும் பெறலாம்!




வரி செலுத்துவோர் அடையாள எண்ணை கட்டாயமாக்குவது ஏப்ரல் வரை தாமதமாகும் என்று நிதி அமைச்சக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பெப்ரவரி மாத இறுதிக்குள் அடையாள எண் பெப்ர வரி பெற்றிருக்க வேண்டும் என்று முன்பு முடிவு செய்யப்பட்டிருந்தது.

எனினும் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திலோ அல்லது பிரதேச செயலகத்திலோ அல்லது 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் அடுத்த மாத இறுதிக்குள் இலக்கங்களை வழங்கி முடிக்க முடியாததால் ஏப்ரல் மாதம் வரை தாமதமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலகங்களில் இதற்கான பிரிவுகள் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டிருந்த போதிலும், புதிய பயனாளிகளுக்கு அஸ்வெசும நலத்திட்ட உதவிகள் வழங்குதல், விண்ணப்பங்கள் கோருதல் போன்ற பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையில் அங்கு நெருக்கடி நிலையைக் கருத்தில் கொண்டு இதற்கான கால எல்லை ஏப்ரல் வரை பிற்போடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 20 மில்லியன் ரூபா பெறுமதியான கொக்கெயின் வெள்ளவத்தையில்!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

வெள்ளவத்தை பெற்றிகா வீதியிலுள்ள அடுக்குமாடியிலுள்ள வீடொன்றை சோதனையிட்ட போது அங்கு சூட்சிதமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 20 மில்லியன் ரூபா பெறுமதியான கொக்கெயின் மீட்கப்பட்டுள்ளது.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மீட்கப்பட்ட கொக்கெயினின் பெறுமதி 20 மில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

சந்தேகத்தின் பேரில் 29 வயதுடைய நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் வெள்ளவத்தை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

